**செய்தி வெளியீடு எண்: 756** **நாள்: 14.12.12**

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்

## 39வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி அரங்குகள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு சுற்றுலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா அவர்கள் இன்று (14–12–2012) ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தீவுத்திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 39வது இந்தியா சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி ரூ.50.00 இட்சம் சுற்றுலாத்துறையின் சார்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்பொழுது அரங்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பொருட்காட்சியில் சுற்றுலாத்துறை, சமூகநலத்துறை, கல்வித்துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மீன்வளத்துறை, கால்நடைத் துறை, ஆதி திராவிடர் நலம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தோட்டக்கலைத் துறை, சிறுசேமிப்புத்துறை, காவல்துறை, பட்டு வளர்ச்சித் துறை, தீயணைப்புத்துறை, வருவாய்த் துறை, பொதுப்பணித்துறை, தொழில்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வனத்துறை, செய்தித்துறை, கூட்டுறவுத் துறை, மாற்றுத்திறனாளிகள்துறை, ஊழல் இலஞ்ச ஒழிப்புத்துறை போன்ற 30 அரசுத்துறைகளும், சென்னை மாநகராட்சி , ஆவின் , தமிழ்நாடு எரிசக்தித்துறை, மாசுக்காட்டுப்பாடு, எல்காட், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னைக்குடிநீர், மின்சார வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற 11 அரசு சார்பு நிறுவனங்களும், இது தவிர மத்திய அரசு நிறுவனங்களான சென்னை துறைமுகக் கழகம், மத்திய ரிசர்வ் வங்கி, தென்னக ரயில்வே போன்றவை உட்பட ஆக மொத்தம் 46 அரங்குகள் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது நடைபெற்று வரும் பணிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா அவர்கள் இன்று (14–12–2012) ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்பொழுது பொருட்காட்சியில் கலந்துகொள்ளும் துறை அலுவலவர்களிடம் அரங்கு அமைக்கும் பணிகளை எதிர் வரும் 21ம் தேதிக்குள் விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார். சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் சிறப்பம்சமாக தமிழ்நாடு அரசின் ஆக்கப்பூர்வ பணிகளையும், மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களையும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் மாதிரி வடிவமைப்புகளுடன் (Working Models) அனைத்து அரங்குகளும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும் என தெரிவித்தார். அரசின் ஒவ்வொரு துறை அரங்குகளிலும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து அதன் பயன்களைப் பெறும் வழி முறைகளையும் அறிந்து கொள்ளும் வகையில் , விளக்க உரைகளையும் வழங்க ஒரு அலுவலரை அங்கு நியமித்து விளக்கி கூறுமாறு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறையின் ஆணையரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு ஹேமந்த்குமார் சின்கா, இ.ஆ.ப., இணை இயக்குநர் திரு எஸ். பக்தவச்சலம், பொருட்காட்சி மேலாளர் திரு கோ. நவநீதரங்கன், உதவி இயக்குநர்கள் திரு கோ. காமராஜன் , திரு வேணுகோபால் , திரு புஷ்பராஜ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**